# 27-06-2024 செய்தி

## மசகான் நிறுவனத்துக்கு நவரத்னா அந்தஸ்து

- மும்பையிலுள்ள மசகானில், 'மசகான் டாக் ஷிப் பில்டர்ஸ்' நிறுவனம் செயல்பட்டு வருகிறது.
- இது பாதுகாப்பு அமைச்சகத்தால் நிர்வகிக்கப்பட்டு வரும் பொதுத்துறை நிறுவனமாகும்.
- இந்த மதிப்புமிக்க அங்கீகாரம் பெறும் இந்தியாவின் 18வது பொதுத்துறை நிறுவனம் இதுவாகும்.
- இந்த தகுதியை பெற்றதன் வாயிலாக, மத்திய அரசின் ஒப்புதலின்றி, 1,000 கோடி ரூபாய் வரையிலான முதலீடுகளை மேற்கொள்வதற்கு அதிகாரம் பெறுகிறது.
- கூடுதலாக, இந்நிறுவனம், அதன் நிகர மதிப்பில் 30 சதவீதம் வரை, பிற நிறுவனங்களில் முதலீடு செய்யும் அதிகாரத்தையும் பெறுகிறது.

## மாஞ்சோலை: தொழிலாளர்களின் எதிர்காலம் காக்கப்பட வேண்டும்

- இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்பிருந்தே தலைமுறை தலைமுறையாக மாஞ்சோலைத் தேயிலைத் தோட்டத்தில் வாழ்ந்துவந்த தொழிலாளர்கள், குத்தகைக் காலம் முடிவடையவிருப்பதால் அங்கிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பது மிகுந்த வேதனையளிக்கிறது.
- 1929இல் சிங்கம்பட்டி ஜமீனிடமிருந்து சுமார் 8,373 ஏக்கர் நிலத்தை வாடியா குழுமத்துக்குச் சொந்தமான பாம்பே பர்மா டிரேடிங் கார்ப்பரேஷன் லிமிடெட் (பி.பி.டி.சி.எல்) நிறுவனம் 99 வருடக் குத்தகைக்கு எடுத்தது.
- விடுதலைக்குப் பிறகு தமிழ்நாடு இனாம் எஸ்டேட் ஒழிப்புச் சட்டம் 1948இன்படி 1952இல் சிங்கம்பட்டிக்குச் சொந்தமான மாஞ்சோலைத் தோட்டம், தமிழ்நாடு அரசின் வசமானது.
- ஏற்கெனவே குத்தகை ஒப்பந்தம் நிலுவையில் இருக்கும் நிலையில் 1958 இல் தமிழ்நாடு அரசு வெளியிட்ட அரசாணையின்படி அந்நிறுவனம் 99 வருடத்துக்கான குத்தகையை அனுபவிக்கலாம் எனத் தீர்மானமானது.
- 1962ஆம் ஆண்டு இந்தப் பகுதியில் முண்டந்துறை புலிகள் சரணாலயம் அறிவிக்கப்பட்டு, 1976இல் அது நடைமுறைக்கு வந்தது.
- அதன்படி இந்தத் தோட்டம் அடங்கிய பகுதியும் இந்த வனப் பாதுகாப்புக்குள் வந்தது. இதை எதிர்த்து பி.பி.டி.சி. எல் நிறுவனம் நீதிமன்றத்தை நாடியது.
- நீண்டகாலமாக நடைபெற்ற இந்த வழக்கில் 2017ஆம் ஆண்டு அது பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிக்குள் வரும் எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது.
- ஆனால், குத்தகைக் காலம் முடியும் வரை- புதிய தோட்டங்களை உருவாக்காமல்- இந்தத் தோட்டத்தை பயன்படுத்திக்கொள்ளலாம் எனத் தீர்ப்பில் கூறப்பட்டது.
- இதன்படி இந்தத் தோட்டத்தை பி.பி.டி.சி.எல் நிர்வகித்துவந்த நிலையில் குத்தகைக் காலம் 2028 பிப்ரவரி 11 ஆம் தேதியுடன் முடிவடையவிருப்பதால், அதைத் தமிழ்நாடு அரசியிடம் ஒப்படைக்கும் பொருட்டே இந்த வெளியேற்றம் நிகழ்த்தப்படுகிறது.
- மாஞ்சோலை எனப் பொதுவாக அழைக்கப்பட்டு வந்தாலும் காக்காச்சி, நாலுமுக்கு, ஊத்து, குதிரையொட்டி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பகுதி இது, தேயிலைத் தோட்டத்துக்காக உருவாக்கப்பட்ட இந்த ஊர், ஐந்தாறு தலைமுறைகளைக் கண்ட பலருக்கும் உணர்வுபூர்வமாகப் பிணைக்கப்பட்ட பகுதியாகும்.

## அமைதிக்கான வழி கண்டதா உச்சிமாநாடு?

- சுவிட்சர்லாந்தில் சமீபத்தில் நடைபெற்ற உக்ரைன் அமைதி உச்சிமாநாட்டில் 100 நாடுகள், சர்வதேச அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.
- உக்ரைன் மீதான ரஷ்யாவின் போரை நிறுத்துவது எப்படி என்பதற்கான வழிமுறைகள் அலசப்பட்டன. ஜுன் 15,16 தேதிகளில் மலைநகரமான லூசர்ன் நகரில் இந்த மாநாடு நடைபெற்றது.
- மனித உயிர்களின் இழப்பு, பல அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் இடிப்பு, நீர்-மின்சாரம் போன்றவை துண்டிப்பு என்று பலவிதமான பாதிப்புகளுக்கு உள்ளாகித் தள்ளாடிக் கொண்டிருக்கிறது உக்ரைன்.
- அதற்கான தீர்வை நாடிய இந்த மாநாட்டில் அரசுப் பிரதிநிதிகள் மட்டுமல்லாமல் சர்வதேச நீதி அமைப்புகள், பிற வணிகங்கள் போன்றவற்றின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டது முக்கியமானது.

**அறிக்கை என்ன சொல்கிறது?**

- உச்சி மாநாட்டின் இறுதியில் பெரும்பாலான பிரதிநிதிகள் ஓர் அறிக்கையில் கையெழுத்திட்டனர்.
- அந்த அறிக்கையில் உக்ரைனில் உள்ள அணுமின் நிலையம் பாதுகாக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.
- ஐரோப்பாவின் மிகப்பெரிய அணுமின் நிலையமான இது தென்மேற்கு, உக்ரைனில் உள்ளது.

- விவசாயப் பொருள்களைப் பிற நாடுகளுக்கு உக்ரைன் அனுப்புவது எந்த விகிதத்திலும் தடை செய்யப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் வணிகக் கப்பல்களின் மீது நடைபெறும் எந்தத் தாக்குதலும் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றும் இந்த அறிக்கை கூறுகிறது.
- போரினால் இடம்பெயர்ந்த உக்ரைன் மக்கள் அவரவர் வசித்த இடங்களுக்கே மீண்டும் வந்து வசிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது. (ரஷ்ய மொழி பேசுபவர்கள் அதிகமாக உள்ள உக்ரைனின் சில பகுதிகளில் வசிக்கும் பிறர், அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று ரஷ்யா உத்தரவிட்டிருப்பது கவனிக்கத்தக்கது).
- இந்த அறிக்கையில் கையெழுத்திட்ட நாடுகளில் ஆஸ்திரேலியா, கனடா, ஐரோப்பிய நாடாளுமன்றம், ஃபிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்கா, உக்ரைன், ஜப்பான், இஸ்ரேல் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.
- கையெழுத்திடாத நாடுகளில் பிரேசில், தான் பார்வையாளராக மட்டுமே வந்திருப்பதாகவும், இந்த அறிக்கையைத் தான் ஆதரிக்கவில்லை என்றும் வெளிப்படையாகவே அறிவித்துவிட்டது.

**நாடுகளின் நிலைப்பாடு**

- இந்தியா, மெக்ஸிகோ, தென் ஆப்ரிக்கா, தாய்லாந்து, இந்தோனேசியா, ஐக்கிய அரபு அமீரகம், சவுதி அரேபியா போன்ற நாடுகளின் பிரதிநிதிகள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை.
- ரஷ்யாவின் போர்க் குற்றங்களை எழுத்துவடிவில் கொண்டுவரும் எந்த ஆவணத்திலும் பங்குபெற இந்த நாடுகள் விரும்பவில்லை என்று எடுத்துக்கொள்ளலாம்.
- அமைதிக்கான உச்சி மாநாடு என்றால் இரு தரப்பினரும் காத்திருக்க வேண்டும். ஆனால், ரஷ்யா அழைக்கப்படவே இல்லை.
- இதுபோன்ற மாநாடுகள் பயனற்றவை என்று தன் கருத்தைக் கூறிவிட்டது ரஷ்யா. சீனாவுக்கு அழைப்பு விடுத்தும் அது கலந்து கொள்ளவில்லை. எனவே, பாகிஸ்தானும் கலந்துகொள்ளவில்லை.
- இந்நிலையில், இந்தியா ஏன் இந்த அறிக்கையில் கையெழுத்திடவில்லை என்னும் கேள்வி எழுப்பப்படுகிறது. இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் செயலாளரான பவண்குமார், இந்த உச்சிமாநாட்டில் ரஷ்யா கலந்துகொள்ளவில்லை.
- சம்பந்தப்பட்ட எல்லோரும் இணைந்து செயல்பட்டால்தான் இந்தப் பிரச்சினை ஒரு முடிவுக்கு வரும் என்று கூறியிருக்கிறார். சவுதி அரேபியாவும் இதை வழிமொழிந்திருக்கிறது.
- இந்த மாநாட்டில் இஸ்ரேல் கலந்து கொண்டது ஆச்சரியம் அளிக்கிறது என்று வேறு ஒரு கோணத்தை இதோடு முடிக்க போகிறது.
- தென் ஆப்பிரிக்கா, இஸ்ரேல்-பாலஸ்தீனப் போர் நிறுத்தத்துக்கு ஏன் ஐரோப்பிய நாடுகள் தீர்வுகளை முன்னெடுக்கவில்லை என்றும் அந்நாடு கேள்வி எழுப்புகிறது.
- அமெரிக்கத் துணை அதிபர் கமலா ஹாரிஸ் 1.4 பில்லியன் (140 கோடி) யூரோ நிதி உக்ரைனுக்கு அனுப்பப்படும் என்று கூறினார்.
- வேறு பல நாடுகளும்கூட நிதி அளிப்பதாக ஒப்புக்கொண்டன. ஐரோப்பிய யூனியனில் உக்ரைனை உறுப்பினராக்குவதற்கான பேச்சுவார்ததைக்கு இதில் சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

## மக்களவைத் தலைவரானால் ஓம் பிர்லா

- பதினெட்டாவது மக்களவையில் தலைவராக பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி (என்டிஏ) சார்பில் நிறுத்தப்பட்ட ஓம் பிர்லா (62) தொடர்ந்து இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இதன்மூலம், சுதந்திரத்துக்குப் பிறகு 4-ஆவது முறையாக தேர்தல் மூலம் மக்களவைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- ஏன்டிஏ கூட்டணி தரப்பில் மூன்று முறை எம்பியாக தேர்வாகியுள்ள ஓம் பிர்லாவும் இந்தியா கூட்டணி தரப்பில் எட்டு முறை எம்.பி.யாக தேர்வாகியுள்ள காங்கிரஸை சேர்ந்த கொடிக்குன்னில் சுரேஷும் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டனர்.
- அவையில் குரல் வாக்கெடுப்புக்கு இடைக்கால அவைத் தலைவர் அழைப்பு விடுத்தார். அப்போது மக்களவைத் தலைவராக ஓம் பிர்லாவை தேர்வு செய்ய ஆளும் என்டிஏ கூட்டணி உறுப்பினர்கள் 'ஆம்' என்றும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இல்லை என்றும் குரல் கொடுத்தனர்.
- இந்தத் குரல் வாக்கெடுப்பில் ஓம் பிர்லாவுக்கே பெரும்பான்மை ஆதரவு கிடைத்ததைத் தொடர்ந்து மக்களவைத் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக மக்களவை இடைக்காலத் தலைவர் பர்த்ருஹரி மகதாப் அறிவித்தார்.

## இந்தியாவில் ராக்கெட் தயாரிப்பு அதானி – தாலஸ் கூட்டணி

- அதானி குழுமத்தை சேர்ந்த 'அதானி டிபன்ஸ் அண்டு ஏரோஸ்பேஸ்' நிறுவனம், பாதுகாப்பு துறை பொருட்களின் வடிவமைப்பு, தயாரிப்பில் ஈடுபட்டு வருகிறது.
- இந்நிறுவனம் இந்தியாவில் ராக்கெட் தயாரிப்பதற்காக, பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த தாலஸ் குழுமத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது.
- தாலஸ் குழுமம், வான்வெளி, பாதுகாப்பு, போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு துறைகளுக்கு மின்சார சாதனங்கள் மற்றும் உபகரணங்களை வடிவமைத்து, தயாரித்து வருகிறது.
- இந்த ஒப்பந்தம், இந்தியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்சில், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மையம் அமைப்பதற்கும், பாதுகாப்பு மற்றும் வான்வெளி துறைகளுக்கான தயாரிப்பு மற்றும் பராமரிப்பு மையங்களை அமைப்பதற்கும், உதவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.